OS.No.359/2023 – 28.10.2024

PW1 – பழனிசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் அதை எனக்கு படித்து காண்பித்தார்கள் அதன் மூலம் எனக்குத் தெரியும். நான் பிரமாண பத்திரிக்கையில் விவசாயம் சார்ந்த தொழில் செய்து வருவதாக கூறி இருக்கிறேனா என்றால் விவசாயம் செய்து வருவதாக கூறி இருக்கிறேன். பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் பருத்தி சொசைட்டிக்கு செல்லும்போது பழக்கம் ஏற்பட்டது.

பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கு 5 வருடத்திற்கு முன்பே அவரை தெரியும் என்றால் சரி. பிரதிவாதி எப்போது பணம் கேட்டார் என்று தேதியை குறிப்பிட்டு பிராதில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு எங்கே வைத்து பணம் கொடுத்தேன் என்றும் அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது கந்தசாமி, தமிழ்மணி ஆகியோர் என்னோடு இருந்தார்கள். நானும் பிரதிவாதியும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் இல்லை, வேறு வேறு ஊரை சார்ந்தவர்கள். என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார்

6 அல்லது 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்த தொகையை எப்படி கொடுத்தேன் என்றால் ரூ.500 கட்டுகளாக கொடுத்தேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிராதிலும் பிரமாண பத்திரிக்கையிலும் பிரதிவாதிக்கு கொடுத்த தொகை எப்படி எனக்கு கிடைத்தது என்று சொல்லவில்லை என்றால் சரி. பொதுவாக ரூ.49,000/– பரிவர்த்தனை செய்யும்போது வங்கி மூலம் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதனால் நான் ரூ,18,00,000/– கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பணத்தை பிரதிவாதி எப்போது திருப்பி தருவதாக சொன்னார் என்று பிராதிலும் பிரமாண பத்திரிக்கையிலும் சொல்வில்லை என்றால் சரி.

05.03.2021 தேதியில் கொரோனா தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு போடப்பட்டிருந்தது என்றும் அதனால் நான் கடன் தொகை கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஊரடங்கு என்றால் என்ன என்று எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியாது. கொரோனா காலத்தில் அரசு உத்தரவுப்படி பொதுமக்கள் யாரும் வெளியில் நடமாட தடை செய்யப்பட்டது என்றால் சரி. அந்த ஊரடங்கு காலத்தில் 6 முதல் 7 கிலோமீட்டர் தள்ளி உள்ள பிரதிவாதி என்னிடம் வந்து கடன் வாங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஊரடங்கு காலத்தில் வங்கி பரிவர்த்தனை எதுவும் இல்லாத காலத்தில்

அசாதாரணமாக ரூ.18,00,000/- நான் கொடுத்திருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வீட்டில் வைத்திருந்த பணத்தைதான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். பிரதிவாதிக்கு நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவர் தாக்கல் செய்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது.

எங்களுக்குள் எந்த பரிவர்த்தனையும் நடைபெறாத காரணத்தால்தான் நான் சொத்திற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் பெற்றுக்கொண்டு என்னை ஏமாற்றிவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. பிராதிலும் பிரமாண பத்திரிக்கையிலும் பிரதிவாதிக்கு எங்கே சொத்து உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த பண பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்பதால் தாவாவும் இடைக்கால மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால்

சரியல்ல. கொரோனா தொற்று காலத்தில் ஆள்நடமாட அனுமதி இல்லாத நிலையில் பிரதிவாதி என் வீட்டிற்கு வந்து பணம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதை நிரூபிக்க தேவையான ஆவணங்கள் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. எனவே தாவாவையும் இடைக்கால மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.